20.11.2024 எம்.சி.ஓ.பி. எண். 115/2021 ம.சா.1 முருகன்

2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை

விபத்து 3-4 வருடங்களுக்கு முன்பு நடந்தது. நான் வாகன பதிவு எண். டி.என்.73 கியூ 1714 என்ற இருசக்கர வாகனத்தில் ஆற்காட்டிலிருந்து கலவைக்கு வந்துக்கொண்டிருந்தேன். ஆற்காடு - கலவை சாலையில் கன்னியம்மன் கோவில் பாலத்தின் அருகே விபத்து நடந்தது. டிராக்டர் மோதி விபத்து ஏற்பட்டது. நான் நிதானமாக தான் சென்றேன். டிராக்டர் தான் வேகமாக வந்து மோதியது. டிராக்டர் ஓட்டுநரின் கவனக்குறைவாலும், அதிவேகத்தாலும் விபத்து நடந்ததாக கலவை காவல்துறையினர் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளனர். 1ம் எதிர்மனுதாரர் தான் வாகன பதிவு எண். டி.என். 57 எ ஒய் 4426 என்ற டிராக்டரின் உரிமையாளர். இருசக்கர வாகனம் எனக்கு சொந்தமானது. என்னுடைய வாகனம் 2ம் எதிர்மனுதாரரிடம் காப்பீடு செய்யப்பட்டுள்ளது. நான் என்னுடைய இருசக்கர வாகனத்தின் உரிமையாளர் என்றும் 3ம் தரப்பினர்களுக்கு தான் என்னுடைய வாகனத்தை காப்பீடு செய்துள்ளேன் என்றும் அதனால் 2ம் எதிர்மனுதாரர் எனக்கு இழப்பீடு வழங்க கடமைபட்டவர் இல்லை என்றால் சரியல்ல. டிராக்டர் ஓட்டுநரின் கவனக்குறைவால் விபத்து ஏற்பட்டது என்றும் நான் இழப்பீடு கோரவேண்டுமென்றால் 1ம் எதிர்மனுதாரரிடம் தான் கோரமுடியும் என்றும் 2ம் எதிர்மனுதாரரை பொறுத்து மனு தள்ளுபடியாக வேண்டும் என்றால் சரிதான்.

1ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை

வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப்படுகிறது.